Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: என 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 25 ஆம் நாள் துல்கஃதா 23 (7-4-64 செவ்வாய்க்கிழமை இதழ் 57

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# பூட்டான் பிரதமர் கொலை

## கொலைகாரனை தேடமுயற்சி

காங்டோக், ஏப்ரல் 6

நேற்றிரவு சுட்டுக் கொலைசெய்யப்பட்ட பூட்டான் பிரதமர் ஜிட்னி டோர்ஜியைக் கொன்ற கொலைகாரனைக் கண்டுபிடிக்கும் முயற்சி இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பிரதமர் தமது மனைவியுடன் தமது அறையில் தங்கியிருக்கையில் இனம் தெரியாத ஒருவரால் நேற்றிரவு எட்டுமணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

[ விபரம் 3-ம் பக்கம் ]

## 'நமது பிரதேசங்களை மீட்டே தீருவோம்'

### நேரு அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 6

"நமது வடசுகு எல்லையில் சீனு ஆக்கிரமிப்புச் செய்துள்ள பிரதேசங்களை மீட்டுவிடுவதென்றே நாம் தீர்மானித்துள்ளோம்" என இந்தியப் பிரதமர் திரு. நேரு இன்று லோகசபையில் தெரிவித்தார்.

இந்திதிப் பிரதேசம் எதையும் மற்றவர் ஆக்கிரமியுச் செய்து வைத்துக்கொள்ள வித்டுவிடமுடியாதெலக் குறிப்பிட்டு திரு நேரு வேலும் பேசுகையில் சீனு கொழியபு யோசனைகளை ஒப்புக்கொண்டால் இந்திய—சீன எல்லைப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணும் முயற்சியில் சீனுவுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா தயார் எனக் கூறினர்.

**சீன படைபலம் அதிகரிப்பு**

பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் நிலைமை பற்றி விளக்குகையில் 1962-ம் வருடத்தைக் காட்டிலும் சீனு மும்மடங்கு படைபலத்தைப் பெருக்கியுள்ளது எனத் தெரிவித்து சீனபபாதுகாப்பு மந்திரியே இவ்விதம் எடுத்துக்கூறியுள்ளார் என சுட்டிக்காட்டினர்.

## கிராமவிஸ்தரிப்புக்கு தோட்டங்களிலிருந்து நிலம்

### அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, திங்கள்

கிராம விஸ்தரிப்புத் திட்டத்திற்காக தோட்டச் சொந்தக்காரர்களிடமிருந்து இரண்டுசத விகிதமான காணிகளை எடுத்துக்கொள்வதென்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இத் தகவலை காணி, அபிவிருத்தி மந்திரி சி. பி. டி' சில்வா தெரிவித்துள்ளார்.

தேயிலைத் தோட்டங்கள் இலங்கையின் செல்வமென்றும் இவைகளை சரியான முறையில் கவனித்தே கிராம விஸ்தரிப்புக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் திரு. சில்வா கூறியுள்ளார்.

கிராம விஸ்தரிப்புக்காக காணிகளை எடுக்கும்பொழுது தோட்டச் சொந்தக்காரர்களையும் பொதுமக்களையும் பாதிக்காதவகையில் கவனம்செலுத்தப்படுமென்றும் திரு. சில்வா கூறினர்.

## நல்லெண்ணெயில் கலப்படம்

### அபராதம் ரூ. 60

யாழ்ப்பாணம், செவ்.

கே. கே. எஸ். வீதியில் வசிக்கும் திரு. சண்முகம் என்பவர் 53 வீதம் தேங்காய் எண்ணை கலந்த நல்லெண்ணையை பொதுமக்களுக்கு விற்பனை செய்ததாக மாநகர சபையினுல் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவால்டனுல் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, 60 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கை மாநகரசபையின் சார்பில் பிரதம உணவுப் பரிசோதகர் திரு எஸ். ஆறுமுகம் தொடர்ந்திருந்தார்.

## படிப்பற்ற நிலையில் பத்துவயது சிறுமி

### நீதியரசர் கவலை

யாழ்ப்பாணம், செவ்

இலவசக்கல்வி வசதியை அரசாங்கம் அளித்தும் படிப்பற்ற நிலையில் பத்து வயது நிரம்பிய ஒரு பெண்பிள்ளை எழுதவாசிக்கத் தெரியாத பின் தங்கிய நிலையில் இருக்கிறார் என்பதை வடபகுதி அசைஸ் விசாரணையின்போது நேற்று அறிந்த பொழுது நீதியரசர் வருந்தினர்.

கரவெட்டி மேற்கில் கல்லோடையென்ற பகுதியில் வசிக்கும் கறுவல் மாணிக்கம் என்பவரை அவ்வூரைச் சேர்ந்த கந்தன் மயிலன் என்பவர் கத்தியால் குத்திக்கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

டாக்டர் ஏ. வைத்திலிங்கமும் காயமடைந்த மாணிக்கமும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மாணிக்கத்தின் மகள் தனலட்சுமி சாட்சியமளித்த போது மணிக்கூட்டில் நேரம் பார்க்கவும் தெரியாது எழுத வாசிக்கவும் தெரியாது. பாடசாலைக்கும் எப்போதாவது போகவில்லை என்பதை அறிவித்ததைத் தொடர்ந்தே நீதியரசர் அவரின் கல்விநிலை பற்றி வருந்தினர்.

பருத்தித்துறையில் கடமையாற்றும் சிங்கள பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் அடுத்த டியாகச் சாட்சியமளிக்கும்போது தமிழ்பேசும் மக்கள் மத்தியில் கடமையாற்றியதால் கோர்ட்டில் ஆங்கிலம்-தமிழ் மொழி பெயர்ப்புப் பரீட்சைக்குட் படுத்தப்பட்டார்.

விசாரணை தொடர்ந்து இன்று 9-15-க்கு நடைபெறும்.

முடிக்குரிய வழக்கறிஞராக திரு. ஏ. ஏ. டி. சில்வாவும் எதிரியின் சார்பில் திரு. ஏ. ரி. ஜி. பிரிட்டோவின் அனுசரணையுடன் திரு. எம். எஸ். சுந்தரலிங்கம் திரு. ஆர். கோபாலரத்தினத்தின் உதவியுடன் ஆஜராளுர்.

## 'மருத்துவதாதிகள் பதவிஉயர்வு: மொழித்தடையை நீக்குக!'

### சுகாதார இலாகா தொழிலாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"மருத்துவ மாதர் தொழில் ஒரு புனிதமான தொழில் என்ற எண்ணம் சமுதாயத்தில் தற்பொழுது ஏற்பட்டு வருகிறது. மருத்துவ மாதர் தொழிலுக்குச்செல்ல வெட்கப்பட்டகாலம் மறைந்துவிட்டது" என்று நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்க மருத்துவ தாதிப்பிரிவினரின் வருடாந்த மகாநாட்டில் டாக்டர் சி. சிவஞ னசுந்தரம் பேசும் போது கூறினர்.

திருமதி எஸ். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் டாக்டர். சி. சிவஞானசுந்தரம், மருத்துவ மாதர் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு ஐக்கியப் பட்டு தொடர்ந்து போராடவேண்டுமென்று கூறினர்.

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் தலைமைச் சங்கத் தலைவர் திரு. சாட்தீன் பேசும் போது கூறியதாவது:-

ஏழு கோரிக்கைகளில் இரண்டு மூன்று கோரிக்கைகளையிட்டு எங்கள் சங்கம் எவ்வித நடவடிக்கை எடுத்துள்ளதென்பதை எல்லோரும் அறிவார்கள் நாட்டின் மற்றப்பாகங்களில் வழங்கப்படும் உரிமை யாழ்ப்பாணப் பகுதியில் மறுக்கப்பட்டிருக்கிறது.

(6-ம பக்கம் பார்க்க)

## இந்தியா விளக்கம்கோரும்

புதுடில்லி ஏப். 6

சென்ற மாதம் 20-ம் திகதி ராமேஸ்வரத்துக்கு வடக்கே கடலில் மீன்பிடிப்பதற்காகச் சென்ற 6 இந்திய மீனவர்கள்மீது, மோட்டார் படகில் சென்ற இலங்கை கடற்படையைச்சேர்ந்தவர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது சம்பந்தமாக இந்திய அர்சாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் விளக்கம்கோரவிருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தினுல் மீனவர்களுள் ஒருவர் காயமடைந்தார் என அறிவிக்கப்பட்டது.

இந்த மீனவர்கள் இந்திய கடற் பிராந்தியத்துக்குள் சென்றுகொட்டிருந்த போதே இலங்கை கடற்படையின்ர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தார் களென இந்தியா கருதுகிறது.

## நிதிஅமைச்சர் நடத்தவிருக்கும் மகாநாடு

கொழும்பு, திங்கள்

நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின தமது அமைச்சின் கீழுள்ள உத்தியோகஸ்தர்களையும் திறைசேரி அதிகாரிகளையும் கொண்ட மகாநாட்டை கிரமமாக நடத்த உத்தேசித்துள்ளார்.

இவ்விதம்கிரமமாக மகாநாடுகளை நடத்துவதால் பல பிரச்னைகளை விரைவில் தீர்த்துக்கொள்ளலமெனவும் அலுவல்கள் தடங்கலின்றி நடைபெற இது வழிவகுக்குமெனவும் மந்திரி நம்பிக்கை கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

---

கொழும்பு, திங்கள்

ஐ நா. கல்வி கலாசார ஸ்தாபனமும் இலங்கை அரசாங்கமும் சேர்ந்து இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் மூவிகைகள் பற்றிய கருத்தரங்கு ஒன்றை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கண்டியில் நடைபெற விருக்கும் இக் கருத்தரங்கில் ஆசியாவிலிருந்தும் மேற்கத்திய நாடுகளிலிருந்தும் நிபுணர்கள் கலந்து கொள்வர். இதுபோன்ற கருத்தரங்கு 1960-ம் வருடத்தில் பாகிஸ்தானில் நடைபெற்றது.

**கோண்டாவில் கொலை வழக்கு**

## சாட்சிக்கு 5 வருட கடுழியச் சிறை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நடந்ததொன்றிருக்க கண்கண்ட சாட்சிகளே சில ஊர் அப்புக்காத்துமார்களின் துர்ப்போதனைகளைக் கருத்தில் கொண்டு பொலிசுக்கு ஒருவிதமாகவும் அதற்கு முரணாக மாஜிஸ்டிரேட்டுக்கும் இவை இரண்டிற்கும் முரணாக சுப்ரீம் கோர்ட்டிலும் சாட்சியமளித்து நீதியை வழங்கவிடாது தடை செய்வது மிகப் பாரதூரமான குற்றமாகும்".

இவ்வாறு வடபகுதி அசைஸ் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கோண்டாவிலைச் சேர்ந்த வெள்ளையன் மூத்ததம்பி என்ற 18 வயது வாலிபன் முன்னுக்குப் பின் முரணாகப் பொய்ச் சாட்சியம் அளித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் மூத்ததம்பிக்கு ஐந்து வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்துக் குறிப்பிட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# க்ஷயரோகத்தை தடுக்கும் வழி

— முகாந்திரம் இ. பி. இராசையா —

**இன்று உலக சுகாதாரதினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தினத்தையொட்டி க்ஷயரோகத்தைத் தடுப்பதற்கான வழிவகைகளை இக்கட்டுரை சுருக்கமாகக் கூறுகிறது.**

மிகவும் நுண்ணிய கிருமிகளான காசநோய்க் கிருமிகளை நாம் எமது சாதாரணக் கண்களால் பார்க்க முடியாது. ஆனால் இக்கிருமிகளை சாதாரண "மைக்குரஸ் கோப்" என்று அழைக்கப்படும் உருப்பெருக்கிக் கண்ணாடிமூலம் நாம் பார்க்கலாம். நவீன மின் உருப்பெருக்கிக் கண்ணாடி மூலம் காசநோய்க் கிருமிகள், மிகவும் பெரிதாக ஏதோ ஒரு வகையிலான தின்பண்டம் போன்று காட்சியளிக்கும் 'பஸிலி' என்ற கிருமிகளின் இனத்தைச் சேர்ந்திருப்பதால் தான் அவைகள் அப்படிக் காட்சியளிக்கின்றன.

காசநோய்க் கிருமிகள் முக்கியமாக மனித உடலில் தான் வாழ்கின்றன. குறிப்பாக இக்கிருமிகள் சுவாசப் பைகளில் வளர்வதுடன் தனது இனத்தையும் இங்கேதான் பெருக்கிக் கொள்கின்றன. க்ஷயரோகக் கிருமிகள் இப்படியாக உற்பத்தியாவதனால் தான்; காசநோயினால் பீடிக்கப்படும் மக்கள்; தங்களுக்கு காசநோய் பீடித்து விட்டது என்பதை உடனடியாக உணர முடியாமலிருக்கின்றனர். இக்கிருமிகள், காசநோய் என்றழைக்கப்படும் கொடிய நோயைப் பரப்ப ஏதுவாக விருப்பதினால்தான், குறிப்பாக இக்கிருமிகளில் நாங்கள் அதிக கவனம் செலுத்துகின்றோம். க்ஷயரோகம் காரணமாக இலங்கையில் வருடா வருடம் 5,000 முதல் 8,000 மக்கள் மரணமடைகின்றனர். என்பதைக் கவனிக்கும் பொழுது இக்கிருமிகளின் அபாயம் எமக்கு நன்கு தெரிகிறதல்லவா? காசநோயினால் பீடிக்கப் பட்டுள்ளவர்களுக்கு, இக்கிருமிகளின் தன்மைபற்றியும் அக்கிருமிகள் எப்படி வாழ்கின்றன, எந்த மாதிரி வளர்கின்றன என்பதையெல்லாம் முன்கூட்டியே தெரியுமேயானால், அவர்கள் (காச நோயினால் பீடிக்கப்பட்டவர்கள்) இறக்கவேண்டிய சந்தர்ப்பம் கூட ஏற்பட்டிருக்க மாட்டாதென்று தான் சொல்லலாம். தற்பொழுது இலங்கையில், சுமார் 75,000 மக்கள் காசநோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தொகையில் அதிகமானவர்களுக்கு, தாங்கள் காச நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது தெரியாது!

புதிதாக ஒருவருக்கு காசநோய் எப்படி ஏற்படுகிறது என்பதை இனி கவனிப்போம். க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டு வேதனைப்படும் ஒருவரின் உடலிலிருந்து வெளியேறும் கிருமிகளினால் தான் மற்றவர்களுக்குக் காசநோய் ஏற்படுகிறது. கவலையீனமாக இருமுதல் தும்முதல் அல்லது பலவிடங்களிலும் துப்புதல் போன்றவைகளினால் தான் க்ஷயரோகக் கிருமிகள் பலரிலும் பரவுகின்றன. இப்படியான க்ஷயரோகக் கிருமிகள் மனித உடலில் மட்டுமின்றி வெளிப்புறங்களிலும் சிறிது காலத்துக்கு வசிக்க முடியும். இக்கிருமிகள், தூசுகளிலும் உணவு பரிமாறும் கோப்பைகளிலும், துவாய்களிலும் சிறிது நேரத்துக்கு சீவிக்க முடியும். இக்கிருமிகள் இப்படியாகவும் பரவலாகவிருப்பதால், ஆரோக்கியமுள்ள ஒரு மனிதன் மேற்குறிப்பிட்டவைகளுள் தொடர்பு கொள்ளும் பொழுதுகூட அவனையும் க்ஷயரோகக் கிருமிகள் அணைத்துக் கொள்கின்றன. இக்கிருமிகள் சுவாசப் பைகளுக்குச் சென்றதும் அங்கே தங்களது ஆட்சியைச் செலுத்த ஆரம்பிக்கின்றன. சுவாசப் பைகளில் குடியிருப்பதற்கு ஒழுங்குகள் செய்வது மட்டுமின்றி இக்கிருமிகள் தங்களது இனத்தையும் இங்கே பெருக்கிக்கொள்ள முழு முயற்சிகள் எடுக்கின்றன.

க்ஷயரோகக் கிருமிகள் சுவாசப்பைப் பகுதியில் புகாமல் தடுத்து வைப்பதற்கு மனித உடலுறுப்புக்கள் முயற்சி செய்கின்றன. இந்த வகையில் க்ஷயரோகக் கிருமியை ஆரோக்கியமான சரீரம் வழமையில் வெற்றிகொண்டுவிடும். உடலின் தடுப்புச் சக்தியையும் மீறி க்ஷயரோகக் கிருமிகள் சுவாசப் பைக்குள் பிரவேசிக்க அதிவேகமாக முயற்சி செய்து வெற்றி பெற்றால் சுவாசப் பைகளுக்குச் சேதமேற்படுவதுடன் மோசமான விளைவுகள் ஏற்பட்டு ஆளுக்கே மோசமேற்படும். க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டவரென்பது அறியாமலுள்ள ஒருவர் அல்லது மறைமுகமாக க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்ட ஒருவர் உள்ள வீட்டில் மற்றவர்களுக்கும் இது சம்பவிக்கலாம்.

போஷாக்குக் குறைவான அல்லது சுத்தமான காற்று, வெளிச்ச வசதிகள் இல்லாத வீட்டிலோ, பாடசாலைகளிலோ, வேலைத்தலத்திலோ பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்ட, ஏற்கனவே உள்ள க்ஷயரோகக்கிருமி தடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து உடைத்துப் பரவி சேதம் விளைவிக்கலாம். பலர் தங்களுடைய உடலில் க்ஷயரோகக் கிருமிகள் தாக்குதல் நடத்துவற்கு வாய்ப்பளிக்கின்றனர். க்ஷயரோகக் கிருமிகள் உடலுள் நுழைந்திருக்கக் கூடும். ஆனால் சுவாசப்பை அவற்றைத் தடுத்து வைத்திருக்கவும் கூடும்.

எனவே, எல்லோரும் இடையிடையே தங்கள் சுவாசப் பைகளைப் பரிசோதித்து தங்கள் உடலில் க்ஷயரோகக் கிருமிகள் இருக்கின்றனவாவென்பதைப் பார்த்துக்கொள்ளவேண்டும். எங்கள் சுவாசப்பைகளை 'எக்ஸ்ரே' படம் பிடித்துப் பார்ப்பதன் மூலம் எங்கள் சுவாசப்பைகளுக்குள் க்ஷயரோகக் கிருமிகள் நுழைந்துவிட்டனவாவென்பதையும் அவைகள் எமது சுவாசப்பைக்கு சேதம் விளைவிக்கின்றனவா என்பதையும் எமது டாக்டர்கள் சுலபமாகக் கண்டு கொள்ள முடியும். இதை ஆரம்பத்திலேயே கண்டு கொள்வதால் அதைச் சுலபமாகக் குணப்படுத்திக் கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## சமசமாஜ வாலிப முன்னணி தீர்மானம்

இப்பொழுதுள்ள நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் இடதுசாரிமுன்னணி அரசாங்கத்துக்குக் கைக்கொடுத்துஉதவ வேண்டியது அவசியமென்ற கருத்துப்பட சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா யாழ்ப்பாண முற்றவெளியிலே நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்படி உதவாவிட்டால் முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கு அது நிச்சயமாக வழிவகுக்குமென்றும் பிரதமர் வலதுசாரிகள் பக்கம் திரும்பலாமென்றும் இதனால் தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்காலத்துக்குத் தீங்கு ஏற்படுமென்றும் அறிவுறுத்தினார்.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இந்நாட்டிலே மானத்துடன் மற்றவர்கள்போல் தாங்களும் சரிசமமாக வாழ வழியுண்டா இல்லையாவென்பதை அறியத்தான் இப்போது கவலை கொண்டிருக்கின்றார்கள். மொழிப்பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்க்க வேண்டுமென்று ஒருபக்கம் கூறும் அரசாங்கம், மறுபக்கம் தனிச்சிங்களச் சட்டத்தைத் தீவிரமாக அமுலுக்குக் கொணர்ந்து, அரசாங்கத் தமிழ் ஊழியர்களில் சிலரை மொழி காரணமாக வேலையிலிருந்து நீக்கியும் வேறுபல நடவடிக்கைகளையும் எடுத்தும் வருகின்றது. இதனால் மனமொடிந்து தமிழ்பேசும் மக்கள் திகைத்திருக்கையில் இதே அரசாங்கத்துக்குக் கைகொடுத்து உதவப் போவதாக சமசமாஜத் தலைவர் கூறுவது தமிழ் மக்களுக்கு எப்படி இருக்குமென்பதை விளக்கத் தேவையில்லை.

அதே கூட்டத்தில் திரு. எட்மண்ட் சமரக்கொடி தமிழ்பேசும் மக்களுக்கு இந்த அரசாங்கம் மொழிவிஷயமாக இழைத்துவரும் தீங்குகளை எடுத்துச் சொன்னார். வேறு பல தலைவர்களும் தமிழர்பால் அனுதாபம் தெரிவித்துப் பேசினர். இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெறுவதற்கு லங்கா சமசமாஜக் கட்சி உடனடியாக முயற்சிசெய்ய வேண்டுமென்று கட்சியின் தலைமைப்பீடத்தைக் கேட்டுக்கொள்வதாக வடபிரதேச சமசமாஜ வா[illegible]மெனனக் கி[illegible]தாக ஒரு தீர்[illegible]நிறைவேற்றியுள்ளது.

இலங்கையிலுள்ள சுமார் முப்பது லட்சம் தமிழ்பேசும் மக்களின் குடி உரிமை, மொழி உரிமை இவற்றைப் பறிக்கும் சட்டங்களை, சமசமாஜக்கட்சி உள்ளிட்டு இடதுசாரிக் கட்சிகள் வன்மையாக எதிர்த்து வந்துள்ளன. இந்த நன்றியைத் தமிழ்பேசும் மக்கள் மறக்கவில்லை.

ஆனால் இடதுசாரிகளின் ஒத்துழைப்பை அரசாங்கம் ஆவலுடன் வேண்டிநிற்கும் இந்த நெருக்கடியான சமயத்தில், தமிழ்பேசும் மக்களின் குறைகளை நீக்க இடதுசாரிகளும் சிறப்பாகச் சமசமாஜத் தலைவர்களும் என்ன முயற்சி எடுக்கப்போகிறார்கள்? தமிழருக்குச் செய்துள்ள அநீதியை நீக்கவேண்டுமென்பதை அரசாங்கத்திடம் நிபந்தனையாகக் கேட்க அவர்கள் தயாரா? இன்றைய நெருக்கடிக்கு, சமூக ஒற்றுமை இல்லாததுதான் காரணமென்றும், மொழிப் பிரச்னையைச் சுமூகமாகத் தீர்க்க, சர்வகட்சிக் கூட்டம் நடத்துவதாகவும் ஏற்கனவே பிரதமர் அறிவித்துள்ளார். இலங்கை-இந்தியர் பிரச்னையையும் தேசிய அடிப்படையிலேயே தீர்க்கவேண்டுமென்றும் அவர் உணர்ந்துள்ளார். இவ்விரு முக்கிய பிரச்னைகளையும், மனிதாபிமானத்துடனும், சர்வதேசச் சட்டத்துக்கு அமையவும் தீர்க்க வேண்டுமென்றும் அப்போது தான்" தாங்கள் இந்த அரசாங்கத்துக்கு உதவுவதுபற்றி யோசிக்கமுடியுமென்றும் ஏன் கேட்கப்படாது?

இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதா இல்லையா என்பது பற்றிச் சமசமாஜக் கட்சிக்குள்ளாகவே பலத்த கருத்துவேற்றுமை இருப்பது, அப்பொதுக்கூட்டத்தில் பலர் பேசியதிலிருந்தும் தெரிகிறது. மேலான அரசியல் அனுபவமும், திறமையும் மிக்க டாக்டர் என். எம். பேரேரா இது பற்றி ஒரு முடிவு செய்யுமுன், தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்கெனவே செய்யப்பட்ட அநீதிகளை நீக்க எல்லா முயற்சிகளும் செய்வாரென்று தமிழ்பேசும் மக்கள் எதிர்பார்ப்பதற்கு, அக்கட்சியின் வாலிப முன்னணியின் தீர்மானமே தக்க சான்றாகும்.

---

## ஐயாறன் எழுதுவது

பிரதமர் ஸ்ரீமாவோவின் அழைப்பை ஏற்று டாக்டர் என். எம். இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்பாரா, மாட்டாரா? இம்முக்கிய கேள்விக்கான பதிலை அறிய நாடெல்லாம் மிக ஆவலுடன் காத்திருக்கும் சமயம் இது.

இச்சமயம் டாக்டர் உள்ளிட்டு சமசமாஜ பெரிய "பீரங்கிகளும்" யாழ்ப்பாணம் வந்து பொதுக் கூட்டத்தில் பேசியதைப்பற்றி இப்போது அரசியல் வட்டாரங்களில் பலரும் கதைக்கின்றார்கள். கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, உங்களுக்காக ஒரு நண்பருடன் முற்றவெளிக்கு முன்கூட்டியே சென்றேன்.

மாலை 6-15க்கு செஞ்சட்டை ஊர்வலத்துடன் தலைவர்கள் வந்துசேர கூட்டம் ஆரம்பமாயிற்று. அரசாங்கத்துக்கு மாறாக கோஷம் எதுவும் செய்யப்படாதென்ற நிபந்தனையுடன் முதல் நாள் ஊர்வலத்துக்கு பர்மிட் அளிக்கப்பட்டதாம். ஆனால் "சுதந்திரக் கட்சி அரசாங்கம்ஒழிக" "இந்த அரசாங்கத்துடன் கூட்டுச்சேர கூடாது" என்ற கோஷங்களையே வழி நெடுக ஊர்வலத்தினர் முழங்கினதாக ஒரு தலைவர் தெரிவித்தார். ஊர்வலமும் கூட்டமும் மிக உற்சாகத்துடன் நடந்தன.

* * *

தமிழ், சிங்களம் இரு மொழிகளிலும்சமசமாஜக்கட்சிக் கீதம் பாடப்பட கூட்டம் ஆரம்பமாயிற்று. எல்லாத் தலைவர்களும் ஆங்கிலத்தில் பேசினர். அதை தமிழில் மொழிபெயர்த்தனர். ஆசிரியர் பானுதேவனின் மொழிபெயர்ப்பு முதல் நம்பர். பேச்சாளரின் உணர்ச்சியையும் கருத்தையும் அவர் அப்படியே பிரதிபலித்தார். கூட்டத்தில் உடனுக்குடன் மொழிபெயர்ப்பது மிகவும் கஷ்டமான வேலை. இரு மொழிகளிலும் மேலான தேர்ச்சி இருப்பதுடன், விஷயமும் நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். அவர் தம் மொழிபெயர்பு மூலம் பலரது பாராட்டுகளையும் பெற்றார். அவருக்கு ஒரு சபாஷ்.

டாக்டர் என். எம். மட்டும் முதலில் இரண்டொரு நிமிஷம் தமிழில் பேசினார்! அவர் தமிழ் சற்றே கொச்சையாக இருப்பினும் தெளிவாக இருந்தது. தமக்குப் பேச பத்தே நிமிஷம் தான் இருப்பதாயும், தமிழில் பேசுவதாயின் அதிக நேரம் பிடிக்குமென்றும், அதனால் ஆங்கிலத்தில் பேசுவதாயும் அதைத் தமிழாலே சொல்வார்களென்றும் கூறிவிட்டு, ஆங்கிலத்தில் அவர் பேசியதை பல காதுகளும் மிகக் கூர்ந்து கவனித்தன.

* * *

முதலில் பேசிய தமிழரின் நண்பர் எட்மண்ட் சமரக்கொடி, சர்வாதிகார ஆட்சியைக் கண்டித்துவிட்டு கூட்டு முன்னணியைச் சேர்ந்த மிஸ்டர் பிலிப் குணவர்த்தன சர்வாதிகார ஆட்சியை ஆதரிப்பது துரதிருஷ்டமென்று கூறி வருந்தினார். கூட்டு அரசாங்கத்தை ஆதரிக்கப்படாதென்று சமசமாஜக் கட்சி தீர்மானித்துவிட்டதாக அவரும், மற்றொருவரும் தெரிவித்தது பலருக்கும் வியப்பளித்தது. சமசமாஜ கட்சி ஏற்கெனவே இவ்வித முடிவு செய்துவிட்டதாயின், இதைப் பற்றிப்பேசவே இனி இடமேது?

ஆனால் டாக்டர் என். எம். கடைசியாகப் பேசியதிலிருந்து "வாசல் இன்னும் திறந்திருப்பதாயும்" அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு அளிக்க இடதுசாரி ஐக்கிய முன்னணி அநேகமாக முன்வரக்கூடுமென்று நம்ப இன்னும் இடமுண்டென்றும் தெரிந்தது.

அரசியல் கட்சிகளிலே அபிப்பிராய பேதம் இருப்பது சர்வசகஜம். ஆனால் அந்த வேற்றுமைகளை கட்சிக்குள்ளாகவே

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பேசித் தீர்த்துக் கொள்வது தான் முறை. ஆனால் இந்த முக்கிய விஷயம் பற்றிய கருத்து வேற்றுமைகள், அன்று பொதுக் கூட்டத்திலேயே அம்பலமாகியது, இடதுசாரி ஐக்கியத்தின்புகழைஉயர்த்தக் கூடியதாக இல்லை.

டாக்டர் கொல்வினின் ஆவேசப் பேச்சிலே "பண்ண்ண் டாட ஆஆஆ...ராஆ நாஆயக்க்கா ஆஆ" என்று அழுத்தி அடித்தொண்டையிலிருந்து பேசியதும் அவருக்கு இந்த அரசாங்கத்தின் மீது எவ்வளவு "அன்பு" இருக்கிறதென்பதைக் காட்டியது. இது வங்குரோட்டு அரசாங்கமென்றும், இதை ஆதரிக்கப்படாதென்றும், மொழி உரிமை முதலிய பிரச்னைகளை இடதுசாரி அரசாங்கம் தான் தீர்க்க முடியுமென்றும் கர்ஜித்தார் அவர்.

அலங்காரப் பேச்சுகளால் பயனில்லை என்றும் உண்மை நிலையை நிதானமாக யோசிக்க வேண்டுமென்றும் கடைசியாகப் பேசிய டாக்டர் என். எம். குறிப்பிட்டு, பேச்சுகள் பலவும் நடப்பதாயும் தாம் எந்த முடிவு செய்தாலும் திரைமறைவில் செய்யாமல் "உங்களிடம் கூறி உங்கள் அனுமதியைப் பெற்றே செய்வேன்" என்றார்.

கூட்டு அரசாங்கம் ஏற்படுமா? அப்படி ஏற்பட்டாலும் அது நீடிக்குமா? இக்கேள்விக்கான பதிலை அறிந்து கொள்ள முடியாமல் கூட்டத்திலிருந்து நண்பர்களுடன் திரும்பினேன்.

* *

பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கென்றும், வாராத செல்வம் வருவிப்பானை மந்திரமுந்தந் திரமும் மருந்துமாகித், தீராத நோய் தீர்த்தருள வல்லான் தன்னைத் திரிபுரங்கள் தீயெழத்திண் சிலை கைக்கொண்ட, போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே.

—திருநாவுக்கரசர்

---

### மணிவாக்கு

நீங்கள் செய்த குற்றங்களைக் கடவுள் கருணையுடன் மன்னிப்பதுபோல, உங்களுக்குப் பிறர்செய்த குற்றங்களை நீங்களும் அன்புகாட்டி மன்னிப்பீர்களாக.

— இபீஸியன்ஸ்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

[illegible] சோபகிருது ஆண்டு
பங்குனி மீ 25உ (7-4-64)

# பூட்டான் பிரதமர் சுட்டுக் கொலை

## கொலைகாரன் தப்பிவிட்டான்

கல்கத்தா, ஏப்ரல் 6

**பூட்டான் பிரதமர் திரு. ஜிட்னிடோர்ஜி நேற்றிரவு பூட்டான் நகரமொன்றில் இனந்தெரியாத ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். 45 வயதான பிரதமர் டோர்ஜி தங்கியிருந்த அறை யன்னல் வழியாக கொலைகாரன் சுட்டிருக்கிறான். சுடப்பட்ட இரண்டு மணி நேரத்துக்குள் அவர் மரணமானார்.**

இமாலயப் பிரதேசத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலுள்ள ராஜ்யமான பூட்டானின் பாதுகாப்பு இந்தியாவிடம் உள்ளது. இந்தியாவும் பூட்டானும் செய்து கொண்ட உடன்படிக்கையின் கீழ் பாதுகாப்புப் பொறுப்பு இந்தியாவிடமுள்ளது.

சிக்கிம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கான இந்திய அரசியல் அதிகாரி திரு அவதார் சிங் பூட்டானில் மூன்று தினங்கள் தங்கியிருந்தபின் சிக்குமுக்குத திரும்புவதற்குமுன் நேற்று ஜிட்னிடோர்ஜியை சந்தித்தார். திரு. அவதார்சிங்கைச் சந்தித்து வழியனுப்பி விட்ட சிலமணி நேரத்தின் பின் பிரதமர் டோர்ஜி சுட்டுக் கொல்லப்பட்டார். சுடப்பட்ட செய்தி கிடைத்ததும் கல்கத்தாவிலிருந்து ஐந்து டாக்டர்களை அவசரமாகப் பூட்டானுக்கு அனுப்ப அவதார்சிங் முயற்சி செய்தபோதிலும் அதற்குள் டோர்ஜியின் மரணச் செய்தி கிடைத்துவிட்டது.

"இந்தியா தனது நல்ல நண்பன் ஒருவரை இழந்துவிட்டது" என்று மரணச் செய்தி கிடைத்ததும் திரு. அவதார் சிங் கூறினார்.

பிரதமர் டோர்ஜியின் சடலம் இன்று பூட்டான் தலைநகருக்குக் கொண்டு செல்லப்படும். நேற்றிரவு 8 மணிக்கு பிரதமர் சுடப்பட்டார்.

### நீர் மேல் நடக்கலாம்!

பெர்ட்டெஸ்காடன் (டாட்) ஏப். 6

ஜெர்மன் அல்ப்ஸ் பகுதியிலுள்ள ராஜா ஏரி எனப்படும் கோனிக்ஸீயில் தண்ணீரின் மீது நடந்து செல்லும்படியான வசதி இப்போது மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. இதன் நீர்ப்பரப்பளவு 3 சதுரமைல். இந்த நூற்றாண்டில் இதன் நீர் பனிக்கட்டியாக இப்போது பத்தாவது தடவை உறைந்திருக்கிறது. இதன் மீது சறுக்கு விளையாட்டு விளையாடுவதற்கென்றே ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருகின்றனர்.

### கடை வீதியில் போர் விமானம்
#### நால்வர் மரணம்

டோக்கியோ, ஏப். 6

அமெரிக்க ஜெட்போர் விமானம் ஒன்று நடைத் தெருவில் விழுந்ததால் சில கடைகள் சேதமடைந்ததுடன் நான்கு பேர் கொல்லப்பட்டனர். 25 பேர் காயமடைந்தனர். விமானத்தில் விமானி மட்டுமே இருந்தார். உயிர் தப்புவதற்காக பாரசூட் மூலம் இறங்கிய அவர் ஒரு மோட்டார் கார் மீது விழுந்ததால் காயமடைந்தார். இச்சம்பவம் தென் மேற்கு டோக்கியோவில் நடந்தது.

## "சிறுபான்மையினருக்கு பாதுகாப்பளிக்க வேண்டும்"

சென்னை, ஏப். 6

கிறிஸ்தவர்கள் உட்பட சிறுபான்மை மக்கள் கிழக்குப் பாகிஸ்தானில் நடத்தப்படும் முறையைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்று சென்னையில் நேற்று நடைபெற்ற இந்திய கத்தோலிக்க மக்களின் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டது.

சிறுபான்மையினரை விரட்டிக் கலைக்கும் திட்டமிட்ட செயல்கள் கிழக்குப் பாகிஸ்தானில் நடைபெறுவதாகவும் ஐம்பதினாயிரம் கிறிஸ்தவர்கள் உட்பட பெருந்தொகையான சிறுபான்மை இனத்தவர் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டு இந்தியாவுக்குள் தஞ்சம் புகுந்திருப்பதாகவும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இச்செயல்களை உடனடியாக நிறுத்த அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனத் தீர்மானம் கேட்டுக்கொண்டது.

### அவாமிலீக் கண்டனம்

ராவல்பிண்டியில் நேற்று நடைபெற்ற அவாமிலீக் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில், இந்தியாவில் முஸ்லிம் சிறுபான்மையினர் மிக மோசமாக நடத்தப்படுவதாகவும் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு இந்திய அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### வேலைநிறுத்தம் முடிவு

ரோம், ஏப். 6

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் நடத்திய வேலைநிறுத்தம் முடிவடைந்தது. இத்தாலி அரசாங்க ஊழியர்களின் இந்த வேலைநிறுத்தம் படுதோல்வியானது என்று மற்றைய தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

### நிருபர் கைது

பிராக், ஏப். 6

செக்கோஸ்லவாக்கிய செய்தி ஸ்தாபனத்தின் பிரேசில் நிருபர் சென்ற வெள்ளிக்கிழமை இரவு ரியோடிஜனிரோவில் கைது செய்யப்பட்டார். நிருபரின் மனைவி செக்கோஸ்லவாக்கிய தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார்.

### கப்பல் தினம்

கல்கத்தா, ஏப். 6

இந்தியாவின் முதல் தேசிய கப்பல் போக்குவரத்து தினம் நேற்று கல்கத்தாவிலும் பம்பாயிலும் கொண்டாடப் பட்டது.

### ஹோலந்தில் சுபந்திரியோ

ஆம்ஸ்டோர்ம், ஏப். 6

ஹோலந்தில் மூன்று நாட்கள் விஜயம்செய்யும்பொருட்டு இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ நேற்று இங்கு வந்து சேர்ந்தார். ஹோலந்து-இந்தோனேஷிய உறவுகள் அபிவிருத்தி குறித்து அவர் இங்கு பேச்சுவார்த்தைகள் நடத்துவாரெனத் தெரியவருகிறது.

### திருடனுக்கு 'டிமிக்கி' கொடுக்கும் நூதன சாதனம்

கோபேகன், ஏப். 6

இங்கு நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் திருடனுக்கு 'டிமிக்கு' கொடுக்கும் நூதனசாதனம் ஒன்றுவைக்கப் பட்டிருந்தது. 'காஷியர், முன்பு திடீரென்று ஒரு திருடன் துப்பாக்கியை நீட்டிக் கையைமேலே தூக்குஎன்று சொல்கிறான் என்றால்அப்போதுகாலின் கீழுள்ள ஒரு பொத்தானை அமுக்கினால் போதும். பணம் இருக்கும் அறை தானாகவே மிக பாதுகாப்பான இரும்பு அறைக்குள் போய் விடும். இந்த இரும்புப் பெட்டியைத் திறக்க அந்த ஸ்தாபனத்தில் பல அதிகாரிகளிடமுள்ள சாவிகளைக் கொண்டுவர வேண்டும்.

## பாக்.-இந்திய மந்திரிகள் இன்று டில்லியில் சந்திப்பு
### நற்பலனளிக்குமென பாக். மந்திரி கான் நம்பிக்கை

ராவல்பிண்டி, ஏப். 6

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வகுப்பு ஒற்றுமையைப் பராமரிப்பது சம்பந்தமான வழிவகைகளைக் காண்பதற்காக இந்திய உள்விவகார மந்திரி திரு. ஜி. எல். நந்தாவும், பாகிஸ்தான் உள்விவகார மந்திரி திரு. கான் அப்துல் கானும் நாளைபுதுடில்லியில் சந்தித்து பேசவிருக்கின்றனர்.

பாகிஸ்தான் உள்விவகார மந்திரி தமது குழுவினருடன் நேற்று ராவல்பிண்டி வந்து சேர்ந்தார். பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனுப் ஸில்புகார் அலி புட்டோவைச் சந்தித்து ஆலோசனை நடத்தியபின் இன்று புதுடில்லிக்குப் புறப்படுவார்.

இங்கு நிருபர்கள் மத்தியில் அவர் பேசுகையில் "டில்லியில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நற்பயனளிக்குமென்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனது வேலை டில்லியிலேயே முடிவடைந்துவிடுமென நினைக்கிறேன்" என்று ஜனுப் கான் தெரிவித்தார்.

## அமெரிக்க மாஜிதளபதி மக்கார்தர் மரணம்
### "மாபெரும் வீரனை இழந்துவிட்டோம்" —ஜனாதிபதி ஜோன்சன்

வாஷிங்டன், ஏப் 6

**அமெரிக்காவின் முன்னாள் தளபதி ஜெனரல் டக்ளஸ் மக்கார்தர் நேற்றிரவு காலமானார். வாஷிங்டனிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் அவர் மரணமடைந்தார். அவரது உயிரைக் காப்பாற்றுவதற்காக 24 மணி நேரத்துக்குள் அவருக்கு மூன்று தடவை சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.**

ஜெனரல் மக்கார்தரின் மறைவு குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில், ஒரு சிறந்த தேசாபிமானியையும் சிறந்த வீரனையும் அமெரிக்கா இழந்துவிட்டதென்று குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் சேர் டக்ளஸ் ஹியூம் விடுத்த அனுதாபச் செய்தியில் இத்தலைமுறையின் மாபெரும் போர்வீரன் மறைந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளார்.

84 வயதான ஜெனரல் மக்கார்தர் 1880-ம் ஆண்டில் பிறந்தார். முதலாவது உலக யுத்தத்தில் போர்வீரனாகப் பணியாற்றிய அவர் 1930-ம் ஆண்டில் படைத்தலைவராகிப் பின்னர் 1937-ம் ஆண்டில் ஓய்வுபெற்றார். இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானதும் அவர் மீண்டும் படையில் சேர்ந்தார். தென் மேற்கு பசிபிக்கில் நேசநாடுகளின் படைத் தளபதியாகப் பணியாற்றிய அவர் 1945-ம் ஆண்டில் ஜப்பானின் சரணகதியை முறைப்படி ஏற்றார்.

1950-ம் ஆண்டில் தென் கொரிய நடவடிக்கையின் போது அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனால் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

### வகுப்பு ஒற்றுமை
#### ஜயப்பிரகாஷ் வலியுறுத்தல்

பாட்னா, ஏப். 6

நேற்று இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் பேசுகையில் வகுப்பு ஒற்றுமையைப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறினார்.

மக்கள் பொறுப்புடனும் மரபு கெடாமலும் நடந்து கொள்ள வேண்டுமென்றும் சிறுபான்மையினரைப் பாதுகாக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பழங்குடி மக்கள் சமூக விரோதிகளின் கைகளில் சிக்கக் கூடாதென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### பீக்கிங்கில் பூமா

பீக்கிங், ஏப். 6

லாவோஸ் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா நேற்று பீக்கிங் வந்துசேர்ந்தார். அவரை சீனகுடியரசுத் தலைவர் லிஷா-ஷியும் பிரதமர் சூ-என்-லாயும் வரவேற்றனர்.

உத்தியோக மொழி அமுல்

## முப்படையினருக்கும் கட்டாய ஓய்வு!

கொழும்பு, திங்கள்

இலங்கையின் முப்படைகளான கடற்படை இராணுவப் படை ஆகியவற்றில் கடமையாற்றும் எல்லாப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், உத்தியோகமொழியில் தேர்ச்சி பெறுவிட்டால் 1966-ம் ஆண்டு சேவையிலிருந்து கட்டாய ஓய்வுபெற வேண்டும்;

உத்தியோக மொழியை அமுல் செய்வது சம்பந்தமாக அரசாங்கம் மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது. அரசாங்க ஊழியர்மீதும் இப்படியான நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்தவருடம் டிசம்பர்மாத முடிவிற்குள் அரசாங்க ஊழியர் உத்தியோக மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

முப்படையினர் அடுத்த வருடம் டிசம்பர் மாதத்திற்கு முன்பு உத்தியோக மொழியில் தேர்ச்சிபெறவேண்டும். இதற்காக அவர்கள் சிங்கள ஆரம்ப பரீட்சையில்சித்தியடைய வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு காரியாலயத்தில் சென்றவார இறுதியில் திரு. என். கியூ. டயஸ் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் இத்திட்டம்பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இம்மகாட்டில் இராணுவத் தளபதி மேஜர் ரிச்சார்ட் உடுகம, கடற்படை காப்டன் ராஜன் கதிர்காமர், விமானப்படை தளபதி ஆர். அமரசேகரா, நிதிஅமைச்சு உத்தியோகஸ்தர்கள், திறைசேரி அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

### புதுவருடத்திற்கு துணி இல்லை

காலி, திங்கள்

காலியிலுள்ள ஏராளமான மக்கள் புதுவருட தினத்தில புது உடையணியமுடியாதவர்களாக இருக்கிறார்களென்று காலி எம். பி. டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா கூறினார்.

கூட்டுறவு மொத்த விற்பனவுக் கடைகளைப் பலவிடங்களிலும் நிறுவும்படி உணவு மந்திரியைக் கேட்டுள்ளதாகவும் இதனால் மக்கள் பெருமளவில் பயனடைவார்களென்றும் திரு. தகநாயக்கா கூறினார்.

### ஜவுளி வாங்க கூப்பனில்லை

பண்டாரவளை, திங்கள்

21-ம் இலக்க பங்கீட்டரிசிப் புத்தகமில்லாத காரணத்தால் தோட்டப் பகுதியிலுள்ள அநேக சிங்கள தொழிலாளர்கள் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையங்களில் துணி பெற முடியாமலிருக்கிறார்கள்.

தோட்டத்தில் சேர்ந்தவுடன் இவர்களின் பங்கீட்டரிசிப் புத்தகம் தோட்ட சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் இதுவரை திரும்பப் பெறவில்லையென்றும் கூறப்படுகிறது.

பண்டாரவளை, திங்கள்

கடந்த 3 தினங்களாக இங்கு சீனிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். குழந்தைகள் உள்ள பெற்றோர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் சீனியின்றிப் பால் குடிக்க மறுத்துவருகிறார்கள்.

சீனியின் கட்டுப்பாட்டு விலை 68 சதமாக இருக்கும் போது சில வியாபாரிகள் 90 சதமாக விற்கிறார்கள்.

# மாணவர் மலர்





# விசித்திர மனிதன்!

மகான்

அலறிக் கொண்டிருந்த டெலிபோனின் 'றிசீவரை' கையிலெடுத்து பின்னர் காதில் வைத்து..."ஹலோ..." என்ருர் ஷகான்.

"நான் தான் அருளப்பன் பேசுகிறேன் ஸார்... ஒரே புதிராக விருக்கிறது... சோமனையுமல்லவா தீர்த்துவிட்டார்கள்......! எனக்கு ஒரே பயமாகவிருக்கிறது ஸார். சங்கரலிங்கம் பிள்ளையின் மரணத்தின் மர்மத்தை துலக்கும் வேலையில் நான் உங்களையும் சேர்த்து ஈடுபட்டிருப்பதால்... ஆபத்து எனக்கும் ஏற்படுமோ என்று பயமாகவிருக்கிறது ஸார்......" என்று வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போனர் அருளப்பன். அருளப்பனின் குரலில் பீதி இருந்தது. அதனுடன் பதட்டமும் குடிகொண்டிருந்தது!

"மிஸ்டர் அருளப்பன் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். கொலைகாரர்கள் என் கையிலிருந்து ஒரு நாளும் தப்பியது கிடையாது. தப்பவும்விடமாட்டேன். நம்பிக்கையுடன் உறுதியாகவிருங்கள். வெற்றி நமக்குத்தான்......" என்று கூறிய ஷகான்...... "ஆமா, சங்கரலிங்கம்பிள்ளையின் மரணம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?" என்ருர்.

"நான் நினைத்ததை நீங்கள் சொல்லிவிட்டீர்கள் ஸார். சோமனின் மரணம் சம்பந்தமாக, சங்கரலிங்கம் பிள்ளையின் மகன் ராஜன் மீது எனக்கு சந்தேகம்தான் ஸார்." என்ருர் அருளப்பன். "சரி... நேரம கின்றது. நாளைக்கு பல முக்கியமான வேலைகளை நான் கவனிக்கவேண்டியிருக்கிறது...... காலை 8 மணிக்கு முன்னர் நீங்கள் இங்கு வாருங்கள். என்ன சரிதானே...?" என்று கேட்டுவிட்டு டெலிபோன் றிஸீவரைக் கீழ வைத்தார் ஷகான்.

★

பொழுது விடிந்தது. யாழ்ப்பாணத்தில் பரபரப்பு சிறிது அதிகமாகக் காணப்பட்டது. சங்கரலிங்கம்பிள்ளையின் மரணம் - அதனைத் தொடர்ந்து சோமன் கொலைச் சம்பவம்—யாழ்ப்பாண மக்களை பெரிதும் அச்சத்தில் மூழ்க வைத்தது.

ஷகானின் வீட்டு சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்தப் பெரிய மணிக்கூடு "டாங்... டாங்..." என்று எட்டுத் தடவைகள் அடித்து இரு நிமிடங்கள் கூட ஆகவில்லை அதற்குள் அருளப்பன் அங்கு வந்துவிட்டார். ஷகானைச் சந்தித்து, தாமதத்துக்கு மன்னிப்புக்கோரிய அருளப்பன், ஷகானின் இரகசிய அறைக்குள் அமர்ந்திருந்தார். அவருக்கருகில் ஷகான் அமர்ந்து கதைத்துக்கொண்டிருந்தார்.

"ராஜனின் மீது உங்களுக்கு சந்தேகம் ஏற்பட என்ன காரணம்?" என்று ஷகான் கேட்டார். "காரணம் இல்லாமல் நான் எவரையும் சந்தேகப்படுவதில்லை ஸார். சங்கரலிங்கம்பிள்ளைக்கு ஏராளமான சொத்து இருந்தது. இதில் சோமனுக்கும் ஓரளவு சொத்தை அவர் எழுதியிருந்தார். ஆனல் ராஜனுக்கு இது விருப்பமில்லை. சோமனை ராஜன் சிறிது குறைவாகவே கவனித்து வந்திருக்கிருர் ஸார்" என்ருர் அருளப்பன்.

"அப்படியானல், சோமனை ஏன் ராஜன் இவ்வளவு அவசரமாகக் கொலைசெய்யவேண்டும்? அவரின் தந்தை இறந்து கூட அதிக நாட்களாகவில்லையே......" என்ருர் ஷகான்.

அதுவும் வாஸ்தவம் தான் ஸார். ஆனல் இதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. சங்கரலிங்கம்பிள்ளை இறந்துவிட்டதால் சொத்து பிரிக்கப்படும். ஏற்கனவே சோமனும் ஒரு (வளர்ப்பு) மகனுகவிருப்பதால் ஏராளமான சொத்து அவருக்கும் சேரலாமல்லவா......! இதனல் ராஜன் சிறிது பொருமை கொண்டு......" என்ருர் அருளப்பன்.

தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்த ஷகான், ஆமா... நீங்கள் முன்பு ஒரு தடவை சொன்னது எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. சங்கரலிங்கம்பிள்ளை சோமன் மீது அவ்வளவு பற்றுக் கொண்டிருக்கவில்லையென்று தானே நீங்கள் சொன்னீர்கள். அப்படியிருக்கையில் சோமனுக்கு எப்படி அதிகமான சொத்து சேரும்?" என்று ஒரு புதிரை போட்டார். "பற்று குறைந்திருந்தாலும் சொத்து விஷயத்தில் சங்கரலிங்கம்பிள்ளை நேர்மை தவறமாட்டார் ஸார். ஏனென்ருல ராஜன், அவசியமில்லாததற்கெல்லாம் வீண்செலவு செய்வார் என்பதை சங்கரலிங்கம்பிள்ளை உணர்ந்துதானிருந்தார்" என்ருர் அருளப்பன்.

சிறிது நேரம் அந்த அறையில் அமைதி நிலவியது. அந்தப் பயங்கர அமைதியில்...... ஷகானின் அற்புத மூளை பல அந்தரங்க விஷயங்களையெல்லாம் துருவி ஆராய்ந்திருக்கும் என்பது அருளப்பனுக்கும் ஓரளவு தெரியலாம். சில நிமிடங்களின் பின்னர் ஷகான்... "மிஸ்டர் அருளப்பன். இந்த மர்மத்தை நான் எப்படியும் கண்டுபிடித்துவிடுவேன். உங்களுக்கு நான் அளித்த வாக்கை நிச்சயம் காப்பாற்றுவேன் அருளப்பன். இடபொழுது மிகவும் அவசியமானதொரு வேலையிருப்பதால் நான் வெளியே செல்கின்றேன். மத்தியானத்துக்குள் உங்களை வீட்டில் சந்திக்கின்றேன்" என்ருர். அதற்கு அருளப்பனும் "சரி... நான் உங்களையே நம்பியிருக்கின்றேன். இந்த மர்மத்தை கண்டுபிடிக்கும் முக்கிய பொறுப்பு உங்கள் கையில் தான் ஸார்." என்ருர்.

"அவசரப்படாதீர்கள் நான் கொடுக்கும் உறுதிமொழி என்றும் குலைந்ததில்லை" என்று ஷகான் அவருக்கு உறுதிமொழியளித்தார். (தொடரும்)

# நமது டயறி

இரசாயன, பௌதிகதுறைகளில் பலவற்றையும் கண்டுபிடித்தவர்களின் பெயர்களும் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டவைகளும் இவ்வாரம் வெளியாகின்றன.

எதை, எவ்வருடம் யார் கண்டுபிடித்தார் என்பதும் அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதும் இங்கேதரப்பட்டுள்ளன. படித்துப்பாருங்கள். கண்டு பிடிக்கப்பட்டவைகள் அனைத்தும் ஆங்கிலப்பெயரில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1 அஸ்பிரின் - 1899 - டிரஸர் - ஜெர்மன்.
2 புரேமின் - 1924 - எட்கர் ருமர் - அமெரிக்கா.
3 கல்சியம் காபைட் - 1888 - வில்ஸன் - அமெரிக்கா.
4 கார்பன் ஒக்ஸைட்ஸ் - 1925 - பிஸாகுறப்ச் - ஜெர்மன்.
5 குளோரின் - 1810 டாவி - ஆங்கிலேயர்.
6 குளோரபோம் - 1831 - குதிரி - அமெரிக்கா.
7 டி. டி. ரி - செயில்டர் - ஜெர்மன்.
8 எலக்ரோன் - 1918 - தோம்ஸன் - ஆங்கிலேயர்.
9 ஈதர் - 1942 - லோங் - அமெரிக்கா.
10 இன்சுலின் - 1922 - பன்டிங் - கனடா.
11 நியூட்ரன் - 1932 - சட்விக - ஆங்கிலேயர்.
12 நைட்ரிக் அசிட் - 1648 - குளோபர் - ஜெர்மன்.
13 நைட்ரிக் ஒக்ஸைட் - 1772 - பிறீஸ்த்லி - ஆங்கிலேயர்.
14 பென்சிலின் - 1929 - பிளமிங் - ஆங்கிலேயர்.
15 ரேடியம் - 1898 - கியூரி அம்மையார் - போலந்து.
16 சல்பியூரிக் அசிட் - 1831 - பிலிப்ஸ் - ஆங்கிலேயர்.
17 டெராமைசின் - 1950 - பின்லே - அமெரிக்கா.

# வோல்ட் டிஸ்னி

— தி. புருஷோத்தமன் —

வோல்ட் டிஸ்னி (Walt Disney) இவரையே 'திரையுலக மந்திரவாதி' என அழைக்கின்றனர். வோல்ட் டிஸ்னி குழந்தைகளுக்கு சினிமாப்படம் தயாரிப்பதில் இணையற்றவர். கையால் வரைந்த கேலிப்படங்களே இவரது சினிமாப்படங்களில் புதுமையானவையும், புகழ்வாய்ந்தவையுமாக இருக்கின்றன. இவரது முதல் தயாரிப்பு 'மிக்கிமௌஸ்' என்பதேயாகும். இதுவே இவரது முதல்படமும், மிகச்சிறந்ததும் புகழ்வாய்ந்ததுமாகும். 'பனியழகியும் ஏழு சித்திரக்குள்ளரும்,' 'தூங்குமழகி', 'காட்டுப் பூனை', 'கணிதத்தீவு', போன்ற சிறந்த பலபடங்களைத் தயாரித்துள்ளார் வோல்ட் டிஸ்னி. தூங்கும் அழகியை ஆறே ஆண்டுகளில் உருவாக்கி விட்டார் இந்த விந்தைமனிதர். இவ்வர்ணப்படம் 75 நிமிடங்களில் முடிந்துவிடுகிறது.

வோல்ட் டிஸ்னிக்கு 62 வயதாகிறது. உலகப்புகழ்பெற்ற கார்ட்டூன் சித்திரக்காரர். எத்தனையோ பத்திரிகைகளில் இவர்வரைந்த அற்புதப் படங்களைப் பார்க்கலாம். இவர் பெரிய கண்டுபிடிப்பாளரும் கூட. 'சர்க்காராமா' என்ற வட்டத்திரைப்படத் தியேட்டரைக்கண்டுபிடித்தவர் வோல்ட் டிஸ்னிதான். இவர்எழுதூற்றுக்குமேற்பட்டபரிசுகளைப் பெற்றிருக்கிருர்.

எட்டரைக்கோடி ரூபாய் செலவில் 160 ஏக்கர் நிலத்தில் ஒரு பெரிய விந்தைநகரை நிர்மாணித்துள்ளார் வோல்ட் டிஸ்னி. இதன் பெயர் 'டிஸ்னிலாண்ட்' (Disney Land). இது மன்னர்களும், ஜனதிபதிகளும், பிரதமர்களும், உலகத்தலைவர்களும், மாமேதைகளும் வியக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றது. டிஸ்னிலாண்டில் உலகில் உள்ள புதுமைகளனைத்தும் உண்டு. மனிதன் கற்பனையில் பிறந்த, பிறக்கப்போகின்ற எல்லா அற்புதங்களையும் இங்கு காணலாம். இவற்றையெல்லாம் விவரிக்க முடியாது.

# மூளைக்கு வேலை

மூளைக்கு வேலை பகுதி இடமின்மை காரணத்தால் இவ்வாரம் வெளியாகவில்லை. சென்றவாரம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அதிகமானவர்கள் சரியாகவே பதிலளித்துவிட்டார்கள்! அவர்கள் யார்? சரியான விடையனுப்பியவர்களின் பட்டியலில் உங்களின் பெயரும் இருக்கிறது. அந்தச் சரியான விடைதான் என்ன என்பதையெல்லாம் அடுத்த செவ்வாய் மலரில் நீங்கள் அறிந்து கொள்ளலாம்.


மெல்லினிய மணங்கமழும்
கோயாவின்
என்ட்டைஸ்
அளிக்கும் சுகபோகம்—
நாள் முழுவதும் வாடாத
புத்துணர்ச்சி!




ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்கரும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு மிக சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்ட்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.




மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ் கார்டீனியா
நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

46

## வானொலிநிகழ்ச்சிகள்

### செவ்வாய் 7-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைஇசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப்போட்டி, 7-00 விவேகச்சக்கரம், 7-30 இசைச்சித்திரம் — "கண்டறியாதன கண்டேன்", 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாகஸ்வரம் — பி. சண்முகசுந்தரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்படஇசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 5-15 வாத்தியஇசை, 5-30 நம்பிக்கை — ஒளிச் சித்திரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 இடம் மாறிய இதயங்கள் — நாடகம், 7-45 சஞ்சனூர் எஸ். தனம்மாள் — பாட்டு, 9-15 முத்து முத்தாக வளரவேணும் — நாட்டுப்பால்நிகழ்ச்சி, 9-45 இலக்கிய ஏடு — இலக்கிய சஞ்சிகை நிகழ்ச்சி.

# "முதலாளித்துவ ஆட்சியில் தமிழருக்கு உரிமை இல்லை"

## முற்றவெளிக் கூட்டத்தில் திருமதி விவியன் பேச்சு

"யாழ்ப்பாணம், செவ்வாய் தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு இதுவரை கையாண்ட முறைகள் தோல்வியடைந்துவிட்டன. இனிமேலாவது அவர்கள் தொழிலாளர் இயக்கங்களுடன் சேர்ந்து தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்."

சமசமாஜக் கட்சிப் பிரமுகரான திரு. வி. காராளசிங்கம் நேற்று முன்தினம் இரவு யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற சமசமாஜக் கட்சி வாலிப முன்னணியின் பகிரங்கக் கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

இங்குள்ள பொலிஸார் சமசமாஜ கட்சி வாலிப முன்னணியின் ஊர்வலத்திற்கு அனுமதியளித்த பெர்மிட்டுடன், சிங்களத்தில் எழுதப்பட்ட துண்டு ஒன்றையும் இணைத்திருந்தார்கள். அதில் ஊர்வலத்தின் போது அரசாங்கத்திற்கு எதிரான சுலோகங்களை எழுப்பக்கூடாதென எழுதப்பட்டிருந்தது. ஆனால் காங்கேசன்துறையில் ஆரம்பமான எங்கள் ஊர்வலம் ஆரம்பத்திலிருந்துகடைசிவரை அரசாங்கத்திற்கெதிரான சுலோகங்களையே முழங்கிக்கொண்டுவந்தது.

ஊர்வலத்திற்கு அனுமதியளித்த பொலிஸார் இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தது மட்டுமல்ல கேட்டுக்கொண்டுமிருந்தார்கள், [மேலிடத்திலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீதியானமுறையில் நடந்துகொண்டாலும், இங்குள்ள பொலிஸார் மக்களிடையே பிரிவை ஏற்படுத்துகிறார்கள். இங்குள்ள பொலிஸார் சரியான வகுப்புவாதிகளாக இருக்கிறார்கள்.

### இராணுவ-பொலிஸ் ஆட்சி

இந்த பொலிஸாருக்கு தெற்குப் பகுதியில் இப்படியான விஷயங்களில் ஈடுபட துணிவு வராது. இங்கு இவர்களுக்கு துணிவுவந்ததற்குக் காரணம் என்ன? இங்கு இராணுவ பொலிஸ் ஆட்சி நடப்பதுதான்! பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஏற்றவராக இங்குள்ள அரசாங்க அதிபர் வந்திருக்கிறார்.

இந்த உத்தியோகத்தர்கள் தமிழ்ப் பேசும் மக்களின் தொண்டைக்குள் கட்டாயப்படுத்தி சிங்களத்தைத் திணிக்க முயற்சிக்கிறார்கள். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு நாளுக்கு நாள் கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டுவருகிறார்கள்.

ஜனநாயக ஆட்சி நடைபெறுவதாகக் கூறப்படும் இலங்கையில் 20 லட்சம் பேர் எல்லா உரிமைகளையும் இழந்து அநாதைகளாகத் தவிக்கின்றார்கள். உரிமைகளை இழந்த இந்த 20 லட்சம் மக்களையிட்டு தமிழ்ப் பேசும் மக்களிலும் பார்க்க தொழிலாளர்களே அதிக அக்கறை கொள்ளவேண்டும். தொழிலாளர்களே உரிமையிழந்த மக்களை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

தொழிலாளர்களுக்குச் சார்பாக இருக்கக் கூடுமென நம்பியிருந்த காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் பெயரைச் சொல்லி இனிமேலும் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது. நடுத்தர வகுப்பினர் மத்தியிலும் இந்த அரசாங்கம் இனிமேல் ஆதரவைப் பெறமுடியாது.

### விவியன் பேச்சு

பொரளை எம். பி. திருமதி விவியன் குணவர்த்தன பேசும்போது கூறியதாவது:-

இந்த நாட்டில் முதலாளித்துவ அமைப்புத் தொடர்ந்து இருக்கும்வரை, அதைப் பின்பற்றி அரசாங்கம் ஆட்சி செலுத்தும்வரை தொழிலாளர்களுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும், சிறுபான்மையினருக்கும் வழிபிறக்காது. தொழிலாளர் அரசாங்கம் ஏற்பட்டால் தான் இந்த நாட்டில் இதுவரை காலமும் கஷ்டப்பட்டுவந்த மக்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

தமிழ் பேசும் மக்கள் தொழிலாளர்களுடன் ஒன்றுசேர்ந்து போராடினுல் தான் அவர்களின் உரிமைகளைப் பெறமுடியும்.

குறிப்பு இல: LA 1201

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாம் 460)

7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 14,000 (பகுதி III ல்) பார்க்கவும்.

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்: யாழ்ப்பாணம்,

கிராமத்தின் பெயர்: கோண்டாவில்.

காணியின் பெயர்: மக்கிக் கிடங்கு அல்லது சிங்காரன்.

ஆரம்பப்பட இல: துண்டு இல: பிரதம படம் 2350-ல் துண்டுகள் I, 2, 3 என்று விபரிக்கப்பட்டிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

குறிப்பு இல: LA 1213

காணி எடுத்தற் சட்டம்(அத்தியாயம் 460)

7-ம் பிரிவின்படி அறிவித்தல்.

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 14,000 (பகுதி III-ல்) பார்க்கவும்.

அட்டவணை


பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்: தென்மராட்சி.

கிராமத்தின் பெயர்: மட்டுவில் வடக்கு

காணியின் பெயர்: வண்ணுன் புலோ, வண்ணுன் புலோவளம்.

ஆரம்பப்பட இல: துண்டு இல: பிரதம பட இல A 2435-ல் துண்டுகள் 1-ம் 2-ம்.

உதவி அரசாங்க அதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.




ஒஸ்டர்மில்க் குழந்தைகள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் திகழ்கிறார்கள்

தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்ப முடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்புச் சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

ஒஸ்டர்மில்க்




கிளக்ஸோ-அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.



## வரி விளம்பரம்

### அரைச்சலர்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலர். 62

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### வாடகைக்கு

நல்லூர், செட்டித்தெருவிலுள்ள 32-ம் இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். விலாசம்: க. திருநாவுக்கரசு, 4 / 42, நீராவியடி, யாழ்ப்பாணம். 214

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் ...திரிமார், அரசியற் பிரமுகர் ...ன் எம்மிடம் சிகிச்சை பெற்ற ...பரங்கள் அடங்கிய சுற்ற ...சைக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

### IMPORTANT ANNOUNCEMENT

### SECRETARIAL AND ACCOUNTANCY TUTORY

An Institute in Jaffna provides lectures for Examination for December, 1964, for Cost and Works Accountants and Chartered Secretaries commencing from May. Lectures and Tuition by Chartered Accountant, Chartered Secretary, Master of Arts, Bachelor of Laws and Bachelors of Commerce.

For particulars apply 1st Floor, Kumaraswamy Buildings, (Opposite Bus Stand), Power House Road, Jaffna. 210

### WANTED

Wanted services Librarian Females preferred. State amount of security payable. Apply Gnaneswaran 1st Floor, Kumaraswamy buildings, (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 211

### RENT

Upstair Large room available - water, drainage and allconveniences. ApplyGnaneswaran, 1st Floor. Kumaraswamy Buildings (Opposite Bus stand), Grand Bazaar, Jaffna. 212


### க்ஷயரோகத்தை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது. ஆரம்பத்திலேயே அறிந்து கொள்வதால் கிருமியை வெற்றி கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆகவே காலத்திற்குக்காலம் யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள மார்பு நோய் சிகிச்சை நிலயத்திற்குச் சென்று எக்ஸ்ரே எடுத்துப் பாருங்கள். செலவில்லாமலும், கஷ்டமில்லாமலும், காலதாமதமின்றியும் 'எக்ஸ்ரே' எடுக்கப்படுகிறது. அரை விநாடிக்குள் 'எக்ஸ்ரே' படம் பிடிக்கப்பட்டுவிடுகிறது.

இதன் பலன் உங்களுடைய ஆரோக்கியத்துக்கு 'பாஸ் போர்ட்' கிடைத்துவிடுகிறது. தாமதமின்றி உடனே செய்யுங்கள்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# எருக்கலம்பிட்டி கிராம சபை தேர்தல் முடிவுகள்

எருக்கலம்பிட்டி, திங்கள்

எருக்கலம்பிட்டி கிராம சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக 6 வட்டாரங்களிலும் நடைபெற்ற போட்டியில் பின்வருவோர் வெற்றியீட்டியுள்ளனர்.

1-ம் வட்டாரம் ஜனப் மக. எஸ். ஹபீபுமுகம்மது, 2-ம் வட்டாரம் ஜனப் மு. க. அப்துல் றகீம், 3-ம் வட்டாரம் ஜனப் கு. ம. முஸ்தபா, 4-ம் வட்டாரம் ஜனப் சே. உ. நாகூர்ப்பிச்சை, 6-ம் வட்டாரம் ஜனப் என். எம். சம்சுதீன், 9-ம் வட்டாரம் ஜனப் சீ. க. மு. அப்துல் கையூம்.

5-ம், 7- ம், 8-ம் வட்டார அங்கத்தவர்களாக முறையே ஜனப் ம. நூர்முகம்மது, ஜனப் பி. மு. முகம்மது சாலிகு, ஜனப் நா. அப்துல்லத்தீபு ஆகியோர் ஏற்கனவே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## புனித சின்னங்கள் அன்பளிப்பு

கொழும்பு, திங்கள்

ஜப்பானுக்கு அன்பளிப்பாக அளிக்கப்படவிருக்கும் புனித சின்னங்களை ஜப்பானுக்கு எடுத்துச் செல்லும் தூதுகோஷ்டி இன்று காலை 8 மணிக்கு கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து புறப்பட்டது. நேற்று இப்புனித சின்னங்கள் கலகிசையிலிருந்து கட்டுநாயக்காவுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. புனித சின்னங்கள் கொண்டப்பழையை கவர்னர் ஜெனரல் ஜப்பான் செல்லும் தூதுகோஷ்டியின் தலைவரான கல்வி கலாச்சார மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லையிடம் ஒப்படைத்தார். தூதுகோஷ்டியில் 7 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

## மாணவர்களுக்கு கைத்தொழில் அவசியம்

ஜாஎல, திங்கள்

'ஒவ்வொருவருட இறுதியிலும் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு அரசாங்கம் வேலைபெற்றுக் கொடுக்க முடியாது. ஆதலால் அவர்கள் பாடசாலையில் பயிலும்பொழுதே கைத்தொழில்களில் பயிற்சிபெற வேண்டியது அவசியம்" என்று கல்வியதிகாரி ஈ. ஏச். டி. அல்விஸ், கந்தானையில் நடைபெற்ற கலை, கைத்தொழிற் பொருட்காட்சித் திறப்புவிழாவின்போது கூறினார்.


ரீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m
Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.
○ Ricardo Montalban
○ Vincent Price
in
THE
BLACK PIRATE
(Totalscope — Eastman colour)



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை)
விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா—டி. ஆர். ராஜகுமாரி
மற்றும் பலர் நடித்த
பெரிய இடத்துப் பெண்


# நீர்வேலியில் தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழரசுக் கட்சியின் நீர்வேலிக் கிளைக் கூட்டம் நீர்வேலி கிராமசபை மண்டபத்தில் திரு. அ. பூசுத்தம்பி தலைமையில் சென்ற சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

மாவட்டப் பிரதிநிதியான திரு. க. சின்னத்துரை இக்கூட்டத்தில் பங்குபற்றிப் பேசுகையில் கட்சியின் நிர்வாக முறைகளையும், கட்சி துரிதமாக செயல்பட கட்சிக் கிளைகள் இயங்கவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் கூறினார்.

இதன்பின்னர் நடைபெற்ற புதிய நிர்வாகசபைத் தெரிவில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. அ. பூதத்தம்பி, உப தலைவர்: திரு. தி நாகேந்திரம், காரியதரிசி: திரு இ தவராஜா, உப காரியதரிசி: திரு. சி. அருந்தவநாதன், தனாதிகாரி திரு. ச. பாலசிங்கம். 8 பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டன.

1. கடந்த ஐந்து வருடங்களாக தமிழ்ப்பகுதிகளில் இருந்து வர்த்தக ஆசிரிய நியமனம் கோரி கல்வித் திணைக்களத்துக்கு விண்ணப்பித்திருந்த பாடசாலைகளின் விண்ணப்பங்களை தொகுதிவாரியாகத் தெரிவிக்கும்படி கல்வி மந்திரியை மன்னார் எம். பி. திரு வ. அ. அழகக்கோன் சென்ற மாதம் 6-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையிற் கேட்டபோது சாவகச்சேரி கோப்பாய்த் தொகுதிகளின் பெயர்கள்மட்டும் கொடுக்கப்பட்டதேயன்றி மற்றத்தொகுதிகளின் பெயர்கள் கொடுக்கப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளில் எல்லாமாக 170 பாடசாலைகள் வர்த்தக ஆசிரிய நியமனம்கோரி விண்ணப்பித்திருந்தும் 21 பாடசாலைகளின் பெயர்களைமட்டுமே கல்வி மந்திரி தெரிவித்துள்ளது பெரிதும் விசனிக்கத்தக்கது.

2. சிங்களம் கற்காத தமிழ் அரசாங்க ஊழியர்களை கட்டாயமாக ஓய்வுபெறும்படி நிர்ப்பந்திப்பதை அரசாங்கம் வாபஸ்பெறும்வரை அரசாங்கத்தோடு கட்சி எவ்வித பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடக்கூடாதென்று கட்சியைக் கேட்டுக்கொள்வது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க உறுப்பினர்கள் கட்டாய ஓய்வுக்கெதிரா எடுக்கு எந்தவித நடவடிக்கைக்கும் எப்போதும் ஆதரவு அளிக்கப்படும் என்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## சாட்சிக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூத்ததம்பி என்ற இவ்வாலிபனின் தந்தையான வெள்ளையனை உலக்கையால் அடித்துக் கொலை செய்ததாக அவ்வூரைச் சேர்ந்த செல்லன் கந்தையா மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு அசைஸ் கோர்ட்டில் விசாரணை நடந்தபொழுதே கண்கண்ட சாட்சியாகக் கருதப்பட்ட மூத்ததம்பி சென்ற வாரம் ஜூரிமார்களின் முன் அளித்த சாட்சியத்தின்மீது நம்பிக்கையில்லாத காரணத்தாலேயே இவ்வழக்குத் தொடரப்பட்டது.

தண்டனை விதிக்கும்பொழுது நீதியரசர் மேலும் குறிப்பிட்டதாவது:

இவ்விதமான பொய்ச்சாட்சியங்கள் இலங்கையின் இப்பாகத்தில் மிக மோசமாகத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இவ்விதம் கோர்ட்டை அவமதிப்போர் மீது இரக்கங்காட்ட முடியாது.

எதிரியான மூத்ததம்பியைப் பார்த்து நீதியரசர் கூறியதாவது:-

இது ஒரு பாரதூரமான குற்றம். உமது குற்றத்திற்கு ஏழு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கவேண்டியது. ஆனால் உமது வயதை மனதில் கொண்டு உமக்கு 5 வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன். காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஐந்து வருடங்களும் உமது சீவியத்திற்கு உமக்குப்பயன் படக்கூடியவகையில் ஏதாவது கைத்தொழிலில் உமக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

இது நிற்க நீர் வயதிற் குறைந்தவரானாலும் உம்மைப் போன்றவர்கள் உமக்கு ஏற்பட்டுள்ள கதியை எண்ணியாகிலும் கோர்ட்டில் குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்கக் கூடியதாக உண்மை பேசுவார்கள்.

மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நீ சாட்சியமளிக்கும் போது உமது மைத்துனர் உமது காலஞ்சென்ற தந்தையைத் தாக்கியதாகக் கூறினாய். இக்கோர்ட்டில் குற்றஞ் செய்தவனுக்குத் தண்டனை விதிக்கப்படாதிருக்கும் வண்ணம் உமது வீட்டாரினதும் வேறு நபர்களினதும் புத்தியின் பேரில் முன் கூறியதை மறுத்துச் சாட்சியமளித்தாய். உம்முடன் சேர்த்து உமது இளைய சகோதரியும் சிறைக்கு அனுப்பப்படவேண்டியவர். ஆனால் கணவனையுமிழந்த உமது தாயின் இரு பிள்ளைகளை ஒரே நேரத்தில் சிறைக்கு அனுப்ப நான் விரும்பவில்லை. ஆகவே உமது சகோதரியை விடுதலை செய்கிறேன்.

## மருத்துவத்தாதிகள் . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் மேற்பார்வை மருத்துவத் தாதிமார் உரிமைகள் வழங்கப்படவில்லை. இந்த உரிமைகளைச் சங்க ரீதியாக எடுத்துக்கொடுப்போம். அதுவும் விரைவில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. எஸ். குணவர்த்தனவும் பேசினார்.

பின்வரும் ஏழு பிரேரணைகளும்நிறைவேற்றப்பட்டன:

மருத்துவத் தாதிகளின் பதவி உயர்ச்சியைப் பொறுத்தவரை தடையாகவுள்ள மொழித் தடையை நீக்குமாறு நிதியமைச்சரைக் கோருகிறோம்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் போன்ற பிரதேசங்களில் மேற்பார்வை மருத்துவத் தாதிகள் நியமனஞ் செய்யப்படாதிருப்பதால் இப்பிரதேசங்களில் மேற்பார்வை மருத்துவத் தாதிகளை நியமிக்க நடவடிக்கையெடுக்குமாறு சுகாதார இலாகா அதிபரைக் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை மாணவ மருத்துவத் தாதிகளின் போதனா பீடமாகக் கணிக்கப்பட்டுள்ளதால் கனிஷ்ட மருத்துவத் தாதிகளை நியமிப்பதற்குப் பதிலாக சிரேஷ்ட மருத்துவத் தாதிகளை நியமிக்குமாறு கோருகின்றோம்.

சகல மருத்துவத் தாதிகளும் 4 வருட காலத்திற்குக் கண்டிப்பாகக் கிராம சேவை செய்யவேண்டுமென்பதை உதாசீனம் செய்யாது அமுல் நடாத்தக் கோருகிறோம். மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## அண்ணா கழகம் வெற்றி

கொடிகாமம், திங்கள்

சாவகச்சேரி அண்ணா கழகத்திற்கும், படகுத்துறைக் கோஷ்டிக்கும், குரும்பசிட்டி மைதானத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் அண்ணா கழகம் வெற்றிபெற்றது.


## ஆரோக்கியவாச வைத்தியசாலைத் திறப்புவிழா

அன்புடையீர்; நிகழும் சித்திரை மாதம் 10-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில், (நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுதற்குரிய வசதிகளுடன்) புதிதாக அமைக்கப்பெற்ற "ஆரோக்கியவாசா வைத்தியசாலை" யை பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ. என்.நவரத்தினம் அவர்கள் திறந்து வைப்பார்கள். இப்பொதுப் பணிக்கு உங்கள் ஒத்துழைப்பையும் பூரண ஆதரவையும் தந்து என்னை இத்தொழிலில் ஊக்குவிப்பதுடன் சுற்றம் சூழச் சமுகமளித்து விழாவைச் சிறப்பித்து மகிழ்ந்தும் மகிழ்வித்தும் ஏகுமாறும், இவ்வறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பே. பிலிப்ஸ், வைத்தியன்,
ஆரோக்கிய வைத்தியசாலை,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. 217


## நாடெங்கும் வங்கிகள் திறக்கப்படும்

கொழும்பு, திங்கள்

புதிதாக ஆயிரத்து ஐந்நூறு வங்கிகள் கிராமப் புறங்களில் கைத்தொழில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக விரைவில் திறக்கப்படும்.

இந்த வங்கிகளைத் திறப்பதற்காக மக்கள் வங்கி கடனுதவியளிக்கும். வங்கிகள் திறக்கும் வேலைகளை அநேக இடங்களில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மேற்கொள்ளும். தற்பொழுது 500 அங்கத்தவர்களைக்கொண்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வங்கிகள் திறக்க அனுமதியளிக்கப்படும்.

## 16-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 16-வது ஆண்டு விழாவைஉதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிதிரு. கே.சிவப்பிரகாசம் ஆரம்பித்து வைத்தார். மேற்படி விழா சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றது.விழாவில் சம்பத்திரிசியார் கல்லூரி வணபிதா திரு ஜோன் மேரி உட்பட பல பிரமுகர்கள் சொற் பொழிவாற்றினர்கள். இறுதியில் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட திரு. கே. சிவப்பிரகாசம் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கையின் அடிப்படை நன்மைகளை விளக்கினர்.

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் மாணவிகளால் ஒரு சிறந்த நடனமும், மாணவர்களால் "கிக்கிரடீஸ்'' என்ற ஹாஸ்ய நாடகமும் மேடையில் இடம் பெற்றன. முடிவில் திரு. அலெக்ஸ் நன்றி கூறினர்.

## அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும்

கம்பஹா, திங்கள்

இன்று இந்த நாடு நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. நாடு முன்னேற வேண்டுமானல் எல்லா அரசியல் தலைவர்களும். முன்னேற்றக் கொள்கையுடைய அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும் என்று கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: எல்லா அரசியல் தலைவர்களும் அரசியல் வேறுபாட்டை ஒதுக்கிவிட்டு, அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்தால், லஞ்சத்தையும் மோசடியையும் இந்தநாட்டிலிருந்து. ஒழித்துவிடலாம். நாட்டின் முன்னேற்றத்தையும் மக்களின் நன்மையையும் கருத்தில் கொண்ட அரசியல் தலைவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு அளிக்கவேண்டும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.